# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
# வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
### 17 ஜூலை 2015 / 01 ஷவ்வால் 1436
## <u>ஈதுல் ஃபித்ருடைய மகிழ்ச்சியைப் பரப்புதல்</u>

اَلْحَمْدُ للهِ الَّذي أَنْزَلَ الفُرْقَانَ وَ أَيَّدَ النَّاسَ بالحِكْمَة وَ البَيَان،
وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ شَهِدَ لِنَفْسِه
الْوَحْدَانِيَّةَ وَ الإِحْسَان وَشَهِدَ بِهِمَا مَلاَئِكَتُهُ وَ الثَّقَلاَن، وَأَشْهَدُ
أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ المَبْعُوثُ بِالرَّحْمَة وَ الرِّضْوَان ،
اَللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِه وَصَحْبِه وَسَلِّمْ
تَسْلِيْماً كَثِيْرًا.أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِه وَلاَ
تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத் தார்களே!

இன்றைய தினம் மிகவும் விஷேசமான தினமாகும். காரணம், இஸ்லாத்தின் இரு முக்கிய தினங்கள், இன்று ஒன்று கூடியுள்ளன. இஸ்லாத்தில், நாள்களில் சிறந்தது வெள்ளிக்கிழமையாகும். ஈதுல் ஃபித்ரு எனும் நோன்புப் பெருநாளாகிறது, ரமதான் மாதம் முழுவதும் நோன்பு முதற்கொண்டு அனைத்து வணக்க வழிபாடுகளிலும் ஈடுபட்டு, அவற்றில்

வெற்றி கண்டதற்காக விழா எடுத்துக் கொண்டாடப்படும் நாள் ஆகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” (பயபக்தியை) அதிகரித்துக் கொள்வதன் மூலமாக தொடர்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வருவோமாக!

ஷவ்வால் மாதத்தில் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நிலையில், புனிதமிக்க ரமதான் மாதம் முழுவதும் நாம் புரிந்த நற்காரியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றத் தவறி விடக் கூடாது. ஜமாஅத்துடன் தொழுகைகளை இணைந்து தொழுதல், திருக்குர்ஆனை ஓதி, அதன் பொருளை அறிதல் முதற்கொண்டு, ஆன்மீக ரீதியிலான செயல்கள் அனைத்தையும் தொடர்ந்து வருடம் முழுவதும் நிறைவேற்ற வேண்டும். நம்மால் முடிந்த அளவு அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்று வோமாக! அவனால் தடுக்கப்பட்ட விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! புனிதமிக்க இந்த தினத்தை, பாவமான காரியங்கள் அல்லது மற்ற மனிதர்களுக்குத் தொல்லை தரும் செயல்களினால் களங்கப்படுத்திட வேண்டாம். இன்ஷாஅல்லாஹ், இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற்ற அடியார்களில் நின்றும் நாம் ஆகுவோம் என நம்புகிறோம். ஆமீன்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
கடந்த ரமதான் மாதத்தில், சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தின் பல்வேறு வகுப்பார்களால் பல கிருபையான மற்றும் கருணைமிக்கச் செயல்கள் நிகழ்த்தப்பட்டன. ஒருவர் மற்றவரோடு எவ்வாறு ஒத்துழைத்துச் செயல்பட வேண்டுமென்ற உணர்வை, உயிரோட்டத்தை நாம் நேரடியாகக் கண்டோம். சிங்கப்பூரில் காணப்படும் பல்வேறு இனங்களையும் உட்படுத்தி, பல்வேறு சமூகத் திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் தேவையுள்ளவர்களுக்கு

நாம் இணைந்து உதவ முடிந்தது. பல்வேறு வகுப்பாரைச் சேர்ந்த சுமார் 2000 தொண்டூழியர்கள், பல்வேறு பொது நலத்திட்டங்களில் ஈடுபட்டார்கள் என அறியப்படுகிறது.

இப்படிப்பட்ட முயற்சிகள் சமுதாய உணர்வை ஏற்படுத்தும் மிகச் சிறந்த முயற்சிகளாகும். இச் சீரிய கலாச்சாரத்தை ரமதானுக்குப் பின்பும் தொடர்ந்து நாம் பின்பற்ற வேண்டும். இதனை ஆர்வப்படுத்தி இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஹதீதில் பின்வருமாறு நவின்றுள்ளார்கள்:

يَا أَيُّهَا النَّاسُ، أَفْشُوا السَّلَامَ، وَأَطْعِمُوا الطَّعَامَ، وَصِلُوا الْأَرْحَامَ،
وَصَلُّوا بِاللَّيْلِ وَالنَّاسُ نِيَامٌ، تَدْخُلُوا الْجَنَّةَ بِسَلَامٍ

பொருள்: மனிதர்களே! சாந்தியைப் பரப்புங்கள்! (பசித்தவருக்கு) தாராளமாக உணவளியுங்கள்! உறவினர்களை அனுசரித்து, அவர்களுடன் சேர்ந்து வாழுங்கள்! இரவில் ஜனங்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது நீங்கள் எழுந்து தொழுங்கள்; அப்போது நீங்கள் சாந்தியுடன் சொர்க்கத்தில் நுழைவீர்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

நமக்கு அமைதியையும் அபிவிருத்திகளையும் வழங்கியுள்ள எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நாம் அதிகமான நன்றிகளைச் செலுத்துகிறோம். நாம் இந்த நாளில், மகிழ்ச்சியான நிலையில் விழா எடுத்துக் கொண்டாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம். இதனை இங்கு கண்கூடாகக் காண்கிறோம். நமது உறவுகளையும் நட்பையும் பலப்படுத்திக் கொள்வதற்காக நமது உறவினர்கள் மற்றும்

நண்பர்களைக் காண்பதற்கு அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்பையும் பெற்றுள்ளோம்.

எனினும், உலகின் எல்லா முஸ்லிம்களும், இந்நாளை, மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பைப் பெறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் மனிதர்களின் கவலைக்கிடமான நிலை, ஷவ்வால் மாதத்தை கவலை மற்றும் சண்டை தகறாறுகளுடன் வரவேற்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்பத்தியுள்ளது. கவலைகளில் மாட்டிக் கொண்டவர்களுக்கு அக்கவலைகள், ஷவ்வால் மாதத்தின் மகிழ்ச்சியைக் குறைத்து விட்டன. எனவே, இந்நாளில், நமது பாசமிக்க குடும்பத்தாருடன் கழிக்க வாய்ப்பு பெற்றுள்ள நாம், இந்த ஈதுல் ஃபித்ரு நோன்புப் பெருநாள் தினத்தை நமக்கு மத்தியிலான உறவுமுறைகளைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வோமாக! முறிந்து விட்ட உறவுகளைச் சேர்த்துக் கொள்வோமாக! நமது தவறுகளுக்காக பாவமன்னிப்புத் தேடிக் கொள்வோமாக! அன்பு, ரஹ்மத் (கிருபை) மற்றும் இஹ்சான் (உபகாரம்) போன்றவற்றின் மூலம் குடும்ப உறவை உறுதி செய்து கொள்வோமாக!

அதே சமயம், நற்பாக்கியம் குறைவாகப் பெற்றுள்ளவர்களுடன் ஈதுல் ஃபித்ரு தினத்தின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வோமாக! நமது அண்டை வீட்டார்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நலன்களை நாடுகின்ற சமூக உறுப்பினராக ஆகுவதற்கு முயல்வோமாக! ஈதுல் ஃபித்ரு தினத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள அன்பின் உணர்வுகள், சமுதாய உணர்வுகளாகவும் ஒருவர் மற்றவருக்கு மரியாதை செய்து கொள்ளும் உறவாகவும் ஆகட்டுமாக! நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில் அன்பையும் சாந்தி,

சமாதானத்தையும் பரப்புவது அவசியமாகும். அதன் மூலம், நாம் வாழும் நாடு மற்றும் உலகம், நம்மனைவருக்கும் சிறந்த இடம் என்பதை உறுதி செய்ய வேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்காக நாம் உடன்பாடான பங்குகளை ஆற்ற வேண்டும். பங்குகளை ஆற்றுவதில் நமக்குள்ளப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு வழங்கியுள்ள அருள்களின் மூலம் தேவையுள்ளவர்களுக்கு உதவ முயல்வோமாக! நேரம், செல்வம், சக்தி ஆகிய ஏதாவதொரு வகையில் உதவுவோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-பகரா” எனும் அத்தியாயத்தின் (Ali'Imran) 104-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَلۡتَكُن مِّنكُمۡ أُمَّةٞ يَدۡعُونَ إِلَى ٱلۡخَيۡرِ وَيَأۡمُرُونَ بِٱلۡمَعۡرُوفِ وَيَنۡهَوۡنَ عَنِ
ٱلۡمُنكَرِۚ وَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡمُفۡلِحُونَ ١٠٤

பொருள்: அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்யுங்கள். மேலும், உங்களுடைய கைகளால் உங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள். ”இஹ்ஸான்” (உபகாரம் செய்தல்) எனும் வழிமுறையைக் கடைப்பிடியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் முஹ்ஸின்களை (உபகாரம் செய்பவர்களை) நேசிக்கின்றான்.

ஜமாஅத்தார்களே!

ஷவ்வால் மாதத்திலும் அதனைத் தொடர்ந்து வரும் மாதங்களிலும் தொடர்ந்து நாம் நன்மையின் பாதையில் இருப்போமாக! கிருபையானச்

செயல்களைப் பரப்பி, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.